TAMIL MURASU, SATURDAY, 17 SEPTEMBER 2022, PAGE 2

# ஆஸ்துமா நோயாளிகளுக்கான பதிவேடு

கடும் ஆஸ்துமா நோயாளிகளுக்கு மூச்சுத்திணறல், மூச்சு இரைத்தல் போன்ற பிரச்சினைகள் ஏற்படும். சிலர் இதனால் வேலைக்குச் சிலநாள் செல்ல முடியாமல் போகலாம். அல்லது தூங்கச் சிரமப்படலாம்.

இதுபோன்ற அறிகுறிகள் உள்ளவர்களுக்கு உதவ சிங்கப்பூர் கடும் ஆஸ்துமா நோயாளி பதிவேடு கடந்த ஏப்ரல் மாதத்தில் தொடங்கப்பட்டது.

கடும் ஆஸ்துமா நோய் பற்றி மேலும் புரிந்துகொள்ளவும் மேலும் செயல்திறன் மிக்க சிகிச்சைகளை வழங்கவும் கடம் ஆஸ்துமா நோய்க்காக சிங்கப்பூரில் வழங்கப்படும் பராமரிப்பை மேம்படுத்தவும் இப்பதிவேடு அமைக்கப்பட்டுள்ளது.

நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தின் லீ கொங் சியான் மருத்துவப் பள்ளி, சாங்கி பொது மருத்துவமனை, சிங்கப்பூர் பொது மருத்துவமனை, டான் டோக் செங் மருத்துவமனை ஆகியவை அடங்கிய ஆய்வுக் கட்டமைப்பு இந்தப் பதிவேட்டைத் தொடங்கியுள்ளது.